**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–5

O.S.No.396/20215

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.Fido gladson | வயது: 27 |
| த/பெ. : திரு. மணிவண்ணன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதிகள் ஆஜர். 4,5 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதிகள், 4,5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய தரப்பில் நான் தாக்கல் செய்யும் ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டும்.

1. என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன்– ஒளி நகல்(அசலுடன் ஒப்பிட்டுபார்க்கப்பட்டது). **சா.சா.ஆ– X9** .

2. என்னுடைய பாஸ்போர்ட்– ஒளி நகல்(அசலுடன் ஒப்பிட்டுபார்க்கப்பட்டது) – **சா.சா.ஆ– X10**

3. நான் கதவு எண். 385/3 இ, அத்திகுட்டைகோட்டம், வி.கவுண்டன்பாளையம் என்ற இடத்தில் நாய், ஆடு, மாடு வளர்க்கிறேன். நான் the Kennal club of India என்ற நிறுவனத்திற்கு கீழ் அவர்கள் கொடுத்த பதிவு சான்றிதழ் – ஒளி நகல்(அசலுடன் ஒப்பிட்டுபார்க்கப்பட்டது) – **சா.சா.ஆ– X11**

4. 10 புகைப்படங்கள் மற்றும் pendrive சா. சா.ஆ– X12.

4,5 பிரதிவாதிகள் தரப்பில் இந்த ஆவணங்கள் சட்டப்படி குறியீடு செய்தது தவறு என்று ஆட்சேபனை செய்யப்பட்டது.

1999 ம் வருடம் தாவா சொத்தை என்னுடைய பெற்றோர் கிரையம் பெற்றார்கள். எனக்கு விவரம் தெரிந்து 2001 ம் வருடத்தில் இருந்து தாவா சொத்து

சர்வே எண். 385/3இ, 386/1 சொத்துக்களில் நாங்கள் குடியிருந்து விவசாயம் பார்த்துவருகிறோம். அப்போது இருந்து என்னுடைய அப்பா நாய்களை வளர்த்து வந்தார். அதை தற்போது நான் முறையாக பதிவு செய்து பராமரித்து வருகிறோன். 2007ம் வருடம் 50–60 நபர்கள் வந்து JCBயுடன் ஆட்கள் வந்து பிரச்சனை செய்தார்கள். அப்போது தான் என்னுடைய அப்பா கொடுத்த திருப்பி கொடுப்பதாக சொல்லி ஏமாற்றி வாங்கிய பவரை கிரையம் செய்துகொடுத்துவிட்டார்கள் என்பது தெரியவந்தது. அதன் பிறகு நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். கேஸ் போட்டோம். கேஸ் நடந்து கொண்டுயிருந்தது. 2020 தில் வேல்முருகன் என்பவர் SB அலுவலகத்தில் அவர் இல்லாதபோது பூட்டை உடைத்து உள்ளே புகுந்ததாக புகார் கொடுத்தார். விசாரணையில் உரிமையில் ஏற்கனவே இருப்பதாக காவல் துறை அதிகாரிகள் முடிவு செய்து புகரை முடித்து வைத்தார்கள். 15–20 நாட்கள் 100 ஆட்களுடன் வந்து JCBயுடன் வேலியை புடிங்கி செட்களை உடைத்து எங்கள் வீட்டுக்குள் அடைத்து தாவா சொத்தில் வேலை செய்து வந்தார்கள். நாங்கள் தாவா சொத்தில் இன்றுவரை சுவாதீனத்தில் உள்ளோம். தாவா சொத்தில் தென்னை மரங்கள் 100 உள்ளது. நாங்கள் தான் அதை பராமரித்து சுவாதீனத்தில் உள்ளோம்.

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1998 ம் வருடம் பிறந்தேன். எங்கு படித்தேன் என்றால் St/ Jospeh பள்ளியில் 2013 வருடம் வரை படித்தேன். பள்ளி மாற்றுசான்றிதழ் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். TC என்ன முகவரி கொடுக்கப்பட்டு உள்ளது என்றால் திருப்பூர் டவுன், மண்ணரை, செல்வபுரம், கதவு எண். 23 என்ற முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. கல்லூரி படித்து உள்ளேனா என்றால் பட்டப்படிப்பு படித்துள்ளேன். Tool and Dye making படிப்பு படித்துள்ளேன். நீதிமன்றத்திற்கு வாதிகளான என் பெற்றோருடன் இன்று வந்தேன் என்றால் சரி. என் பெற்றோர் நான் ஒன்றாக வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். என்னுடைய பெற்றோர் இதற்கு முன்பு தாவாவில் சாட்சியம் அளிக்கும்படி கூப்பிட்டாரா என்றால் கூப்பிட்டார். என்னுடைய அப்பா, அம்மா தாவாவில் வாதிகளாக உள்ளதால் நான் சாட்சி சம்மன் மூலம் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர் 2வது பிரவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் விவரங்கள் தெரியுமா என்றால் அவர்கள் சொல்லி தெரியும். பவர் பத்திரத்தின் படி பொது அதிகார முகவர்

முருகானந்தம் என்பவருக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது. முருகானந்தம் தாவா சொத்தை நாகவிஜய்க்கு கிரையம் செய்து கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது. நாகவிஜய் வேல்முருகனுக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தது தெரியுமா என்றால் தெரியும். 2021 ம் வருடம் அடிஆட்களுடன் அவர் வந்து பிரச்சனை செய்தபோது தெரியும். இந்த வழக்கு பற்றி எப்போது தெரியும் என்றால் 2007 ம் வருடத்தில் இருந்து தெரியும். தாவா சொத்தை பொறுத்து ஆவணங்களை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்துபார்க்கவில்லை. நாங்கள் கொடுக்காத பத்திரங்கள். அந்த பத்திரங்கள் எங்களுக்கு சம்மந்தமில்லை. அந்த பத்திரங்களுக்கு எனக்கும் சம்மந்தமில்லை என்பதால் நான் படிக்கவில்லை என்றால் தவறு. சா.சா.ஆ–11 ஐ பொறுத்து நாய்களை வளர்ப்பதற்கு பதிவு சான்றிதழ் பெற்றுள்ளீர்களா என்றால் இல்லை. என்னுடைய அப்பா நாய்கள் வளர்த்து வந்தற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் நானோ என்னுடைய அப்பாவோ தாக்கல் செய்யவில்லை என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை. சா.சா.ஆ–11 தற்போது 2023 ல் பெறப்பட்டுள்ளது என்றால் சரி. சா.சா.ஆ–11 பெறுவதற்கு வேறு என்ன ஆவணங்கள் கொடுத்தீர்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் என்னுடைய குடியிருக்கும் அடையாள ஆவணம், நாய்கள் வளர்ப்பதற்கான புகைப்படங்கள் அதன்பிறகு அவர்கள் நேரில் வந்து பார்த்து சா.சா.ஆ 11 கொடுத்தார்கள். சா.சா.ஆ–11 நான் எங்கு வசிக்கிறோம் அதை பொறுத்து கொடுக்கப்பட்டுள்ளது, தாவா சொத்தை பொறுத்து கொடுக்கப்படவில்லை என்றால் ஆமாம். சா.சா.ஆ–11 தவறான ஆவணங்களை கொண்டு தாவாவிற்காக பெற்றுள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தற்சமயம் அது யார் பெயரில் உள்ளது என்றால் வேல்முருகன் பெயரில் உள்ளது. அதற்கு முன்பு என் அப்பா பெயரில் இருந்தது அதை பார்த்துள்ளேன். வேல்முருகன் தாவா சொத்தில் உள்ளார். நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றால் தவறு. தாவா சொத்தில் உள்ள வீட்டில் வாதிகள் மற்றும் நான் அத்துமீறி நுழைந்ததாக 5 ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் கொடுத்தார். அது விசாரணை நடந்து உரிமையில் பிரச்சனை என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சொன்னார்கள். தாவா சொத்தில் நாய் பண்ணை வைத்திருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தில்

நானோ, வாதிகளோ சுவாதீனத்தில் இல்லை 5ம் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் தவறு. நாங்கள் தாவா சொத்தில் 5ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இடைஞ்சல் செய்து வருவதாக பல புகார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் தவறு. எங்களுடைய சுவாதீனத்தை இடைஞ்சல் செய்வதாக எங்களுடன் சேர்ந்து பொது மக்களும் புகார் கொடுத்துள்ளார்கள் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. பொது மக்களும் எங்களுக்கு ஆதரவாக புகார் கொடுக்கவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

4ம் பிரதிவாதி இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.18 18:52:26 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.